1990 மார்ச் 31]

ஆட்சித் தலைவர் அந்த இடத்தில் பேருந்து நிலையம் கட்ட இயலாது என்ற செயற்குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன் நின்று, அங்கே அதற்கான இட ஏற்பாட்டைச் செய்து கொடுத்தால், நிச்சயமாக பேருந்து நிலையம் கட்ட நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

தாரமங்கலம் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்

* 6325—திரு. கே. அர்ஜுனன்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், தாரமங்கலம் பேரூராட்சியில் நிலம் ஆர்ஜிதம் செய்து பேருந்து நிலையம் கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாரமங்கலம் பேரூராட்சியில் தற்போது உள்ள பேருந்து நிலையத்தை இடித்துவிட்டு புதிய பேருந்து நிலையத்தை பேரூராட்சிக்குச் சொந்தமான நிலத்திலேயே கட்டுவதற்குத் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இப்பேருந்து நிலையத்திற்குக் கூடுதலாக நிலம் ஏதும் ஆர்ஜிதம் செய்யத் தேவையில்லை.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதிருக்கிற இடம் வசதி போதாது என்ற காரணத்தாலும், அங்கே 10 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் புறப்படக்கூடிய அளவுக்கு நிறைய போக்குவரத்து நெருக்கடி உருவாகியிருக்கிற காரணத்தாலும், சேலத்தைச் சுற்றியிருக்கிற இடங்களுக்குச் செல்கிற லாரிகள் நேரத்தை மிச்சப்படுத்தும் வகையில், போக்குவரத்துக்கள் அங்கே செல்கிற காரணத்தாலும், சங்ககிரியிலிருந்து ஓமலூருக்கும் தர்மபுரிக்கும் செல்கிற வண்டிகள் அவ்வழியாக செல்கிற காரணத்தாலும், அங்கே இடம் போதாமல் இருக்கிறது. ஆகவே, அங்கே இருக்கிற கடைக்காரர்களை அப்புறப்படுத்திவிட்டு பஸ் நிலையத்தை விரிவாக மாற்றியமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் பேரூராட்சி பேருந்து நிலையத்திற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டுமோ அந்தத் தகுதிகளுக்குரிய பேருந்து நிலையத்திற்கான இடம், பேரூராட்சி மன்றத்தின் வசமே இருக்கிறது. அதாவது தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற இடம், புல எண். 176/1, ஏ-1, 1பி1 1பிஏ, மற்றும் 2-ல் உள்ள நிலத்திலேயே கட்டுவதற்கு ஒருங்கிணைந்த

நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் கோரி, நகர வளர்ச்சித் துறைக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டு, நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளன.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலை துவக்கப்பட்டு சுமாராக எவ்வளவு காலத்திற்குள் முடிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்திருக்கிறது. இடம் போதுமா, போதாதா என்ற பிரச்சினை வேறு. அந்த வேலைக்காக 20 லட்சம் ரூபாய் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அதற்குப் பிறகு 13 கடைகளும், 45 தினசரி மார்க்கெட்டுக்குரிய கடைகளும் கட்டுவதற்கான திட்டம் அதிலே புகுத்தப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு 10 லட்சம் ரூபாய் கடன் கொடுத்தால் கூட, ஆண்டுக்கு 1.50 லட்சம் ரூபாய் வருமானம் வரவேண்டும். அது வருமா என்பதற்காக விளக்கம் கேட்டு திருப்பி விடப்பட்டது. அதற்குப் பிறகு பேரூராட்சி மன்றத்தலைவர் பேரூராட்சி மன்றத்தின் வருவாயை உத்தேசித்தும், மக்களின் நலனைக் கருதியும் அந்தக் கடைகளையும், அந்த தினசரி மார்க்கெட்டுக்குரிய கடைகளையும் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதையும் அதற்கான வருவாய் கிடைக்கும் என்பதையும் தெரிவித்ததன் பேரில் இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. துரிதமான நடவடிக்கை எடுக்கப்படும்.

9.20 மணி

பரனூர் தொழு நோயாளிகள் விடுதி.

*3085—டாக்டர் து. திருமூர்த்தி :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரனூர் தொழு நோயாளிகள் விடுதியிலிருந்து நோயாளிகளைத் தகாத முறையில் வெளியேற்ற நிர்வாக அதிகாரி முற்படுவது அரசுக்கு தெரியுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்திலிருந்து எந்த ஒரு இல்லவாசியையும் தகாத முறையில் வெளியேற்ற அரசு அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.